# நலம் தரும் நரசிம்ம அவதாரம்

ஐந்து வயது நிரம்பிய சிறுவனும், பகவானின் சிறந்த பக்தனுமான 'பிரகலாதனை' காப்பாற்ற உடனடியாக பகவான் எடுத்த அவதாரமே 'நரசிம்ம' அவதாரமாகும். சதுர்தசி நாளன்று இந்த அவதாரம் ஏற்பட்டதால் 'நரசிம்ம சதுர்தசி' என்று கொண்டாடப்படுகிறது. இவ்வருடம் மே 18ம் தேதி சனிக்கிழமை ஸ்ரீநரசிம்ம சதுர்தசி திருநாள் வருகிறது.

ஸ்ரீநரசிம்மர் அவதரித்த இந்த திருநாளில், பகவான் நரசிம்மரைப் பற்றியும், பக்த பிரகலாதரைப் பற்றியும் நினைப்பது மிகவும் அவசியமானதாகும்.

பகவத்கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், ''பக்தரைக் காத்து, தீயவரை அழிப்பதற்காக யுகந்தோறும் தான் தோன்றுவதாக'' கூறுகிறார்.

சுவாமி ஸ்ரீலபிரபுபாதா கூறுகையில், ''பகவான் ஒருவரை காப்பாற்ற நினைத்தால் யாராலும் அவரை அழிக்க முடியாது! அதே போல பகவான் ஒருவரை அழிக்க நினைத்தால் யாராலும் அவரை காப்பாற்ற முடியாது!!'' என்று குறிப்பிடுகிறார். இதனை நரசிம்ம அவதார லீலை தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

முன்னொரு சமயம் இரண்யகசிபு என்ற அசுரராஜன், சமய தர்மங்களை நிறைவேற்றுவதற்கு தடை செய்து சாதுக்களையும், முனிவர்களையும் துன்புறுத்தி வந்தான். தான் செய்த கடுந்தவத்தின் மூலம் பிரம்ம தேவரிடம் இருந்து, ஒரு பெரிய வரத்தை பெற்றான். இதனால் மிகவும் செருக்குற்றிருந்தான்.

முதலில் அவன் பிரம்மதேவரிடம் பெற விரும்பிய வரம் என்னவென்றால், ''சாகா வரம் தான்''. ஆனால் பிரம்ம தேவரோ இதனை தன்னால் தர இயலாது என்று மறுத்து விட்டார்.

''அசுரனே இரண்யகசிபு! படைக்கப்பட்ட ஒவ்வொரு வருக்கும் இறப்பு நிச்சயம். எனக்கே மரணம் உண்டு! உனக்கு எப்படி மரணம் வராமல் போகும்'' என்றார்.

பிறகு இரண்யகசிபு, யாராலும் மரணம் சம்பவிக்க முடியாதளவிற்கு மற்றொரு வரத்தைக் கேட் டான். ''மனிதராலோ, மிருகத்தினாலோ, தங்களால் படைக்கப்பட்ட எந்த ஜீவராசியினாலோ, நான் வசிக்கும் இடத்திலோ அல்லது அதற்கு வெளியிலோ, பகலிலோ அல்லது இரவிலோ, தரையிலோ அல்லது ஆகாயத்திலோ, எந்த ஆயுதத்தாலோ, எந்த அரச னாலோ அல்லது தேவராலோ கூட எனக்கு மரணம் ஏற்படாது என்ற வரத்தை எனக்கு அருளுங்கள் பிரபு!'' என்று வேண்டினான் இரண்யகசிபு.

இதைக் கேட்ட பிரம்மா சற்று சிந்தித்தபின், ''இந்த வரங்கள் மிகவும் கடினமானது. இருப்பினும் நீ செய்த கடுந்தவத்தினைக் கருதி, உனக்கு நான் வழங்குகிறேன் என்று அருளினார்.

இந்த வரத்தைப் பெற்ற இரண்யகசிபு, வழக்கத்திற்கு மேலாக தனது அக்கிரமச் செயல்களை அதிகரித்தான். தன்னை யாராலும் கொல்ல முடியாது என்ற அகந்தையுடன் திக்கெங்கும் சுற்றித் திரிந்தான். சுவர்க்க லோகம் உட்பட மேலுலகங்கள் எல்லாவற்றிற்கும் சென்று அங்கு வசிப்பவர்களை துன்புறுத்தி துரத்தினான் இரண்யகசிபு. சுவர்க்க ராஜனான இந்திரனின் அரண்ம னையை ஆக்ரமித்தான். மேலும் கண்ணில் பட்ட தேவர்களை எல்லாம், எந்த காரணமும் இன்றி தண்டித்தான்.




எல்லாவற்றையும் விட மிகவும் கொடுமையானது, தனது மகன் என்று கூட பார்க்காது, தன் சொந்த பிள்ளையையே கொல்லத் துணிந்தது தான்.

பிரகலாதன், அசுரன் இரண்யகசிபுவின் மகன். தனது அன்னையின் கருவில் இருந்த போதே, மகரிஷி நாரதரின் கருணையால் பகவான் கிருஷ்ணரிடம் பக்தி ஏற்பட்டது பிரகலாதருக்கு.

ஐந்து வயது தான் என்ற போதிலும், பகவான் மீதும், பகவான் திருநாமத்தின் மீதும் மிக உயர்ந்த பற்றுதல் இருந்தது பிரகலாதருக்கு.

ஆனால் அசுரன் இரண்யகசிபுவுக்கோ, இது துளியும் பிடிக்க வில்லை. ஏனென்றால் தன்னை விட உயர்ந்தவர் யாருமில்லை என்று எண்ணினான் அவன். தான் பெற்ற வரத்தினாலும், தனது சொந்த பலத்தினாலும் மிகவும் ஆணவமடைந்து பிரகலாதன் மீது மிகவும் வெறுப்படைந்தான்.

ஒருமுறை இரண்யகசிபு, தன் மகன் பிரகலாதரை அழைத்து, ''எனதன்பு மகனே பிரகலாதா! இவ்வளவு காலமாக நீ நமது அசுர குல ஆசிரியர்களிடம் இருந்து நன்றாக கல்வி கற்றுள்ளாய் என்று கேள்விப்பட்டேன். அப்படி நீ கற்றுக் கொண்ட அறிவுகளில் எது சிறந்தது?'' என்று கேட்டான்.

உண்மையில் பிரகலாதர், அரசியல், இராஜ தந்திரம் இவைகளைப் பற்றி தான் பேசுவார் என்று இரண்யகசிபு நினைத்தான்.

ஆனால் பிரகலாதரோ, ''பகவான் விஷ்ணுவின் நாமங்களைப் பாடுவதும், கேட்பதுமே சிறந்தது என்று குறிப்பிட்டார்.

இப்படிச் சொன்னதும், தன் பற்களால் உதடுகளை கடித்துக் கொண்ட இரண்யகசிபு மடியில் இருந்த பிரகலாதனை, கோபத்துடன் கீழே தரையில் தள்ளினான்.

''இந்த பிரகலாதன் எனது மகனல்ல. விரோதி. இவனை கொன்று விடுங்கள்'' என்று தனது அசுர

வீரர்களிடம் கட்டளையிட்டான்.

உடனே கொடூரமான அசுர வீரர்கள் பலர் ஓடி வந்து, ஈட்டிகளாலும், ஆயுதங்களாலும் பிரகலாதரை தாக்கி மிரட்டினர். கிருஷ்ண பக்தியை விட்டுவிடும் படி கூறினர். ஆனால் பிரலாதரோ, எப்போதும் கிருஷ்ணரையே நினைத்துக் கொண்டும், துதித்துக் கொண்டும் இருந்தார். எனவே ஆயுதங்களால் தாக்கியும் கூட பிரகலாதருக்கு ஒன்றும் ஆகவில்லை. பகவான் அவரை காப்பாற்றினார்.

இதனால் இரண்யகசிபு, மேன்மேலும் கோபமுற்றான். பிறகு தானே நேரடியாக தன் மகன் என்று கூட பாராமல் பிரகலாதரை கொல்லத் துணிந்தான்.

''மதிகெட்டவனே! குலத்தை அழிக்கப் பிறந்த பதரே! மூடனே பிரகலாதா! இன்றே உன்னை யமபுரிக்கு அனுப்புகிறேன் பார்! உன் கடவுள் எங்கு இருக்கிறார்? இருந்தால் உன்னைக் காப்பாற்றட்டும்'' என்று சீறினான்.

பிரகலாதரோ மிகவும் அமைதியாகவும், அடக்கமாகவும், கைகளைக் கூப்பியபடி, '''தந்தையே! எங்கும் இருக்கும் பகவான் உங்கள் முன் மட்டும் இருக்கமாட்டாரா என்ன? இருக்கிறார் தந்தையே!''

''அப்படியென்றால் இந்தத் தூணில் இருக்கிறாரா உன் கடவுள்!''

''இருக்கிறார் தந்தையே இருக்கிறார். இந்தத் தூணிலும் இருக்கிறார்.''

உடனே இரண்யகசிபு, எதிரே இருந்த அரண்மனைத் தூணை, வெகு வேகமாக ஓங்கித் தாக்கினான்.

அப்படித் தாக்கியதும், அத்தூணிலிருந்து அதிபயங்கரமாக சப்தத்துடன், பிரகாசமான ரூபம் ஒளியுடன் வெளிப்பட்டது. சிங்கம் போன்ற முகத் துடன், மனித உடலுடன் கோரமான சிங்கப் பற்களுடன் ''ஸ்ரீநரசிம்ம ரூபத்தில் ஆவேசமாக வெளிப்பட்டார் பகவான் விஷ்ணு. அதாவது பகவான், தன் தூய பக்தனான பிரகலாதரின் கூற்றை நிரூபிப்பதற்காக இதற்குமுன் கண்டிராத, மனிதருமல்லாத, சிங்கமுமல்லாத அதியற்புதமான வடிவம் கொண்டு ''ஸ்ரீநரசிம்மராக'' அவதரித்தார்.

உருக்கிய தங்கத்தையொத்த அவரது கோபக் கண்களின் காரணத்தால் பகவானுடைய ரூபம் மிகவும் பயங்கரமாக இருந்தது. அவரது கைகளில் சங்கு, சக்கரம், கதை, தாமரை போன்றவை வீற்றிருந்தன.

பகவானின் இந்த ரூபத்தை கண்ட இரண்யகசிபு, ஆச்சரியமும், அதிர்ச்சியும் அடைந்தவாறு தன் கதாயுதத்தை எடுத்துக் கொண்டு ஒரு யானையைப் போல் நரசிம்மரைத் தாக்கினான். பகவான் நரசிம்மரும் அவனை தனது கரங்களால் கடுமையாக தாக்கி இறுகப் பிடித்தார். பின்பு விட்டு விட்டார். இரண்யகசிபுவோ, தன் வீரத்தை கண்டு பயந்து, தன்னை விட்டுவிட்டதாக தவறாக எண்ணி மீண்டும் அவரைத் தாக்கினான். ஆனால் பகவான் அட்டகாசமாக சிரித்துக் கொண்டே,

சட்டென மீண்டும் பிடித்தார்.

அப்போது சூரியனும், சந்திரனும் சந்திக்கும் சந்தியா நேரம் வந்தது. இரண்யகசிபுவை தன் கரங்களில் தூக்கிய வண்ணம் அரண்மனை சபா மண்டபத்தின் வாயிற்படிக்குச் சென்றார் நரசிம்மர். அங்கு தன் தொடையில் இரண்யகசிபுவை கிடத்தி, எந்த வித ஆயுதமும் இல்லாமல் வெறும் தனது விரல் நகங்களினால் இரண்யகசிபுவின் வயிற்றைக் கிழித்து வதம் செய்தார்.

அதாவது இரண்யகசிபு தன்னை கொல்ல யாராலும் முடியாது என்று நினைத்தான். ஏனென்றால் அவன் வாங்கிய வரம் அப்படி இருந்தது. ஆனால் பிரம்மா அவனுக்கு அளித்த எல்லா வரங்களையும் மீறாதவாறு, பகவான் அவனை வதம் செய்தார் . அதாவது பகலிலோ, இரவிலோ அல்லாமல் இரண்டும் சந்திக்கும் வேளையிலும், ஆகாயத்திலோ, தரையிலோ இல்லாது தனது மடியில் வைத்தும், உள்ளேயோ, வெளியேயோ இல்லாது வாசற்படியில் வைத்தும், எந்த விதமான ஆயுதம் ஏந்தாமல் வெறும் விரல் நகங்களினாலும், மனிதராகவும், மிருகமாகவும் இல்லாமல், இரண்டும் கலந்த ஸ்ரீநரசிம்ம ரூபத்திலும் இவ்வாறாக அவன் பெற்ற எல்லா வரங்களையும் தாண்டி அழித்து விட்டார்.

இது தான் பகவானின் சர்வ வல்லமை ஆகும். இது குறித்து சுவாமி பிரபுபாதா கூறுகையில், ''பகவான் ஒருவரை அழிக்க வேண்டும் என்று நினைத்து விட்டால், யாராலும் அவரைக் காப்பாற்ற முடியாது. அதே போல் பகவான் ஒருவரை காப்பாற்ற நினைத்தால், யாராலும் அவரை கொல்ல இயலாது'' என்று குறிப்பிடுகிறார்.

இப்படியாக பகவான் வெல்ல முடியாத இரண்யகசிபுவை வதம் செய்தும், தூய பக்தரான பிரகலாதரை காப்பாற்றியும் பக்தர்கள் அனைவரையும் பரவசப்படுத்தினார்.

நாளை என்பது நரசிம்மரிடத்தில் இல்லை என்பது போல் அமைந்தது பகவானின் விசேஷமான இந்த நரசிம்ம அவதாரம். பகவான் உடனடியாக வந்து தனது பக்தனை காப்பாற்றி, இரண்யகசிபுவுக்கு பாடம் புகட்டினார்.

எந்த ஒரு காரியத்தையும், நாம் நரசிம்மரை பிரார்த்தித்து துவக்கினோம் என்றால் நம்மை நிச்சயம் நரசிம்மர் உடன் இருந்து பாதுகாப்பார்.

நரசிம்ம அவதாரம் மற்றும் பிரகலாதரின் உபதேசங்கள் உள்ளிட்ட விரிவான விளக்கங்கள் அடங்கிய புத்தகங்கள் இஸ்கான் ஹரே கிருஷ்ணா கோயில்களில் கிடைக்கின்றன. இஸ்கான் கோயில்களில் தினமும் காலை 5 மணிக்கும், இரவு 7 மணிக்கும் நரசிம்ம பிரார்த்தனை நடைபெறுகிறது.

## நரசிம்மரின் திருவருள் பெற

நரசிம்ம அவதார தினத்தன்று அதிகாலை முதல் சூரிய அஸ்தமனம் வரை முழுவிரதம் இருப்பது நல்லது. (உடல்நலம் குறைந்தவர்கள் பால், பழங்கள், நீர் அருந்தலாம்) மிக முக்கியமாக, 'ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை'' அதிகபட்சம் உச்சரிக்க வேண்டும். ஸ்ரீமத் பாகவதம் 7வது காண்டத்தில் உள்ள 'நரசிம்ம அவதார லீலை'யை படிப்பது சிறந்தது.

இஸ்கான் ஹரே கிருஷ்ணா கோயிலில் மாலை 6 மணி முதல் சிறப்பு வழிபாடுகள் நடைபெறகின்றன. இதில் ஸ்ரீஸ்ரீலெக்ஷ்மி நரசிம்மருக்கு மஹா அபிஷேகம், பிரகலாத நரசிம்ம பிரார்த்தனை மற்றும் விசேஷ பூஜைகள் நடைபெற உள்ளன. அனைவரும் பங்கேற்று நரசிம்மரின் திருவருளை பெறலாம்.

- இஸ்கான், மணிநகரம், மதுரை.

பயமற்ற நிலையினை அடைய பக்தனுக்கு நம்பிக்கையளிப்பது பகவான் நரசிம்ம தேவரின் புனித நாமத்தை ஜபிப்பதேயாகும். நாம் எங்கு சென்றாலும் பகவான் நரசிம்ம தேவரையே எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் பக்தனுக்கு பயமே கிடையாது.

– ஸ்ரீல பிரபுபாதா

## நரசிம்ம பிரார்த்தனை மந்திரம்

**நமஸ்தே நரசிம்ஹாய**
**ப்ரஹலாதாலாத – தாயினே**
**ஹிரண்யகஷி போர் வக்ஷஹ**
**ஷிலா–டங்கா–நகாலயே**

பிரகலாத மன்னருக்கு ஆனந்தத்தை அளிப்பவரும் அரக்கன் ஹிரண்ய கசிபுவினுடைய பாறைப் போன்ற மார்பின் மேல் வைத்த உளி போன்ற நகங்களையுடையவருமான நரசிம்ஹ பெருமானுக்கு என் வணக்கங்களை அர்ப்பணிக்கின்றேன்.

**இதோ நிரிஷிங்ஹ பரதோ நிரிஷிங்ஹோ**
**யதோ யதோ யாமித தோ நிரிஷிங்ஹோ**
**பஹிர் நிரிஷிங்ஹோ ஹிரிதேய நிரிஷி ஹோ**
**நிரிஷிங்ஹம் ஆதிம் ஷரணம் ப்ரபத்யே**

நரசிம்ம பெருமான் இங்குமிருக்கிறார்; அங்குமிருக்கிறார். நான் எங்கு சென்றாலும் நரசிம்ம பெருமான் அங்கிருக்கிறார். அவர் இதயத்தின் உள்ளும் இருக்கிறார்; புறத்திலும் இருக்கிறார். எல்லாப் பொருட்களுக்கும் ஆதி மூலமாகவும், முதன்மையான அடைக் கலமாகவும் விளக்கும் நரசிம்ம பெருமானிடம் நான் சரணடைகிறேன்.

**தவ கர – கமல – வரே நகம் அத்புத ஷிரிங்கம்**
**தலித – ஹிரண்யகஷிபு – தனு – ப்ரிங்கம்**
**கேஷவ த்ர்தா – நரஹரி ரூப ஜய ஜகதீஷ ஹரே**

கேசவா! உலக நாயகா! ஹரி பெருமானே! மனிதன் பாதி, சிங்கம் பாதியான ரூபத்தை எடுத்தவரே! உங்களுக்கு எல்லாப் புகழும் உரித்தாகுக! எவ்வாறு ஒருவர் தன் விரல் நகங்களிடையே ஒரு குளவியை சுலபமாக நசுக்க முடியுமோ அவ்வாறு குளவி போன்ற ஹிரண்ய கசிபுவின் உடல் உங்களுடைய அழகிய கமலக் கரங்களில் இருக்கும் அற்புதமானக் கூரிய நகங்களால் கிழிக்கப்பட்டது.

# நரசிம்ம அவதாரத்திலிருந்தும், பிரகலாதரின் உபதேசங்களிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கியமான விஷயங்கள் :

* பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இல்லாத இடமே இல்லை. அவர் தூணிலும் இருக்கிறார். துரும்பிலும் இருக்கிறார்.

* கிருஷ்ண பக்தியில் பயிற்சிசெய்யாமல் மூவுலகங்களை வென்றாலும் கூட ஒருவனால் மகிழ்ச்சியடைய முடியாது.

* மென்றதையே மெல்லுவதற்கு சமமானது உலக விஷயங்கள். எந்த விதமான நற்சுவையும் கிடையாது.

* கிருஷ்ண பக்திக்கு எந்த சூழ்நிலையும் தடையாக இருக்க முடியாது. கருவிலேயிருந்தாலும் கூட கிருஷ்ண பக்தியை பயில முடியும்.

* குழந்தை பேச ஆரம்பிக்கும் தருணத்திலிருந்தே பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் நாமத்தை கற்றுக் கொடுக்க வேண்டும்.

* கிருஷ்ணரின் நாமத்தை உச்சரிப்பதும், கேட்பதுமே மனித வாழ்வில் நாம் செய்ய வேண்டிய மிக உயர்ந்த செயலாகும்.

* வாழ்வில் கட்டுப்படுத்தப்படாத மனமும், ஐம்புலன்களுமே முக்கியமான ஆறு எதிரிகள்.

* உடலில் வரும் அரிப்பு போல புலன்களை திருப்திபடுத்துவதில் முடிவு என்பதே கிடையாது.

* பெறுவதற்கரிய மனித வாழ்க்கையை உலகக் கல்வி, தொழில், குடும்பம் இவற்றில் மட்டும் வீணடித்து விடக் கூடாது. கிருஷ்ணரின் நாமத்தை உச்சரிக்கவும், கிருஷ்ண விஞ்ஞானத்தை புரிந்து கொள்ளவும் சிறிதளவாவது செலவிட வேண்டும்.

* மனித வாழ்வின் நோக்கமே பகவான் ஸ்ரீகிருஷ்ணரை நினைப்பது தான்.

* வெறும் புலன் திருப்திக்காக, பொருளாதார முன்னேற்றத்திற்காக பாடுபடாதீர்கள். அது உண்மையான மகிழ்ச்சியையோ, பாதுகாப்பையோ தராது. (உதாரணமாக ஹிரண்யகசிபு)

* பகவானின் பக்தித் தொண்டில் ஈடுபடுங்கள். அது உண்மையான மகிழ்ச்சியையும், பாதுகாப்பையும் தரும். (உதாரணமாக பிரகலாதர்)

* புத்திசாலியான மனிதன் உடல் நலிந்து விடாமல் பலத்துடனும், மனம் உறுதியுடனும் இருக்கும் பொழுதே (இளமைப் பருவத்திலேயே) பக்தித் தொண்டை பயிற்சி செய்யத் துவங்கி விட வேண்டும்.

- ஸ்ரீலபிரபுபாதாவின் ஸ்ரீமத் பாகவத உரையை அடிப்படையாகக் கொண்டது . . .